**செய்தி வெளியீடு எண்: 609** **நாள்:19.09.2019**

## செய்தி வெளியீடு

2019–ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு போக்குவரத்துத்துறை மூலம் செயல்படுத்த இருக்கும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டம் **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்கள் தலைமையில் இன்று (19/09/2019) தலைமைச் செயலக கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர், டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை ஆணையர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை துணைச் செயலாளர் திரு.பி.பிரபாகர், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) (பொறுப்பு) திரு.பிரேம் ஆனந்த் சின்கா, இ.கா.ப., இணை ஆணையர் (சென்னை வடக்கு) திருமதி.ஜெயகௌரி,இ.கா.ப., துணை ஆணையர் (போக்குவரத்து) மேற்கு, திருமதி.எஸ்.லட்சுமி, இ.கா.ப., துணை ஆணையர் (போக்குவரத்து) தெற்கு திரு.என்.எம்.மயில்வாகணம், இ.கா.ப., துணை ஆணையர் (அண்ணா நகர்) திரு.எம்.எஸ்.முத்துசாமி,இ.கா.ப., உதவி ஆணையர் கோயம்பேடு, சென்னை மாநகர காவல் துறை துணை ஆணையர் (தெற்கு) மற்றும் போக்குவரத்து இணை ஆணையர், காவல் துறை உதவி ஆணையர், காவல் துறை துணை கண்காணிப்பாளர்கள் (காஞ்சிபுரம் / வண்டலூர்), செங்கல்பட்டு துணை ஆட்சியர், தாம்பரம், பூவிருந்தவல்லி மற்றும் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சி அலுவலர்கள், NHAI திட்ட இயக்குநர், CMDA செயற்பொறியாளர், அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை தலைவர் அலுவலக அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த வருட தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 03/11/2018 முதல் 05/11/2018 வரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் (CMBT) கோயம்பேடு, தாம்பரம் சானிடோரியம் பேருந்து நிலையம், அண்ணாநகர் மேற்கு மாநகரப் பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி பேருந்து நிலையம், சைதாப்பேட்டை நீதிமன்ற பேருந்து நிறுத்தம் ஆகிய ஐந்து இடங்களிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,275 பேருந்துகளுடன் 4,005 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டன. இவற்றில், 7,19,480 பயணிகள் பயணம் செய்துள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் (CMBT) கோயம்பேடு, தாம்பரம் சானிடோரியம் பேருந்து நிலையம், தாம்பரம் இரயில்நிலைய பேருந்து நிறுத்தம், மாதவரம் புதிய பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி பேருந்து நிலையம் மற்றும் மாநகரப் போக்குவரத்துக் கழக கே.கே. நகர் பேருந்து நிலையம் ஆகிய 5 இடங்களிலிருந்தும் வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 24/10/2019 முதல் 26/10/2019 வரையில் மேற்கூறிய இடங்களிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,225 பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகளாக 4,265 பேருந்துகள் என மூன்று நாட்களும் சேர்த்து ஓட்டு மொத்தமாக, சென்னையிலிருந்து 10,940 பேருந்துகளும் இயக்கப்படும். பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட மூன்று நாட்களுக்கு 8,310 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன.

தீபாவளி பண்டிகை முடிந்து பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு 27/10/2019 முதல் 30/10/2019 வரை 4627 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். மேலும் தீபாவளிப் பண்டிகை முடிந்து ஏணைய பிற முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 6,921 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

**முன்பதிவு வசதி**

பயணிகள் முன்பதிவு செய்து கொள்ள, நடைமுறையில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக இணையதள வசதியான **www.tnstc.in** உடன் **www.redbus.in, www.paytm.com** மற்றும் **www.busindia.com** போன்ற இணையதளங்கள் மூலமாகவும் முன்பதிவு செய்துகொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோயம்பேடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் முன்பதிவு கவுண்டர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

கடந்த 2018—ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையின் போது 2,04,115 பயணிகள் முன்பதிவு செய்து பயணம் செய்தனர். தற்பொழுது 33,984 பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர். முன்பதிவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும் வருகின்ற ஆயுதப் பூஜை பண்டிகையை முன்னிட்டு தொடர் விடுமுறையாக இருப்பதால் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்துநிலையம் கோயம்பேட்டில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு வருகின்ற வெள்ளிக்கிழமை 04.10.2019 முதல் 06.10.2019 ஞாயிற்றுக் கிழமை வரை திண்டிவனம் வழியாக திருவண்ணாமலைக்கு இயக்கப்படும் பேருந்துகள் மட்டும் தாம்பரம் ரயில் நிலைய பேருந்து நிறுத்தத்தில் இருந்து இயக்கப்படும்.

## வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9